## 28.29 உயர்நிலைக் குழு பரிந்துரைகள் – தமிழ் வளர்ச்சிப் பண்பாடு தொடர்பான இனங்கள் – ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு கூடுதல் அதிகாரங்களைப் பகிர்ந்தளித்தல்

தமிழ் வளர்ச்சி பண்பாடு (ம) அறநிலைய (பண்2) துறை

அரசாணை (நிலை) எண். 411 நாள் : 29.6.1999

படிக்க :

ஊரக வளர்ச்சித் துறைச் செயலரின் நேர்முக கடித எண் 14532/சி4/99 நாள் 11.5.99.

மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு கூடுதல் அதிகாரங்கள் வழங்க அரசுக்கு பரிந்துரை செய்ய அமைக்கப்பட்ட உயர்நிலைக் குழு தனது அறிக்கையை அரசுக்கு 11.1.99 அன்று சமர்ப்பித்தது. உயர்நிலைக்குழு அறிக்கையிலுள்ள பரிந்துரைகள் மீது அரசு எடுத்துள்ள முடிவுகள் குறித்து அறிக்கை பார்வையில் படிக்கப்பட்ட கடிதத்தில் தமிழ் வளர்ச்சி பண்பாட்டுத் துறைக்கு அனுப்பப்பட்டு அத்துறை சம்பந்தப்பட்ட பரிந்துரைகள் மீது ஆணைகள் வெளியிடுமாறு ஊரக வளர்ச்சித் துறை கேட்டுக்கொண்டது. அதற்கிணங்க 'பண்பாடுகள்' என்ற தலைப்பில் மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு அதிகாரங்களை கீழ்க்கண்டவாறு ஒப்படைப்பு செய்து ஆணை வெளியிடப்படுகிறது.

### கிராம ஊராட்சிகள்

1) கிராமப் புறங்களில் நடைமுறையிலுள்ள விளையாட்டுகளை அடிக்கடி நடத்துவதோடு திருவிழாக்களையும், அதோடு தொடர்புடைய பல்வேறு வகையான கலை நிகழ்ச்சிகளையும் நடத்தலாம். இதற்கு தேவையான உதவிகளை (நிதி உதவி தவிர) கலை பண்பாட்டுத் துறையிடமிருந்து பெறலாம்.

2) கிராம மக்களை அதிகம் கவரும் இசை, நாட்டுப்புறக் கலைக்குழுக்கள் மற்றும் நாடக/நடன பண்பாட்டுக் குழுக்களை ஏற்படுத்தி அவற்றை முறையாக ஒருங்கிணைத்து, கலை பண்பாட்டுத்துறை உதவியுடன் (நிதியுதவி தவிர்த்து) மக்களிடையே கல்வியறிவு பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தலாம்.

3) சிறு குடும்ப கோட்பாட்டின் இன்றியமையாமை, தேசிய ஒருமைப்பாடு, மத நல்லிணக்கம், தீண்டாமை ஒழிப்பு போன்றவற்றின் அவசியத்தை மக்களிடம் பரப்ப தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.

4) தற்போது நலிந்த நிலையில் வாழும் சிறந்த கலைஞர்களை கண்டறிந்து அரசின் நிதியுதவியை அவர்கள் பெறுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.

விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்திற்கு நிதியுதவி செய்தல், விளையாட்டு வளாகங்களை நிறுவுதல், திறமையான விளையாட்டு வீரர்களை கண்டறிந்து அவர்களுக்கு தேவையான பயிற்சியை அளித்து உதவலாம்.

### ஊராட்சி ஒன்றியங்கள்

1) கிராம ஊராட்சிகள் மற்றும் உள்ளூர் கலாச்சார நிறுவனங்கள், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் போன்றவற்றின் உதவியுடன் கலாச்சார விழா மற்றும் விளையாட்டுப் போட்டிகளை கலை பண்பாட்டு இயக்கத்துடன் ஒருங்கிணைத்து நடத்தலாம்.

2) சம்பந்தப்பட்ட கிராம ஊராட்சிகளின் உதவியுடன் உள்ளூர் திருவிழாக்களை நடத்தலாம்.

3) விளையாட்டுக்களையும், கலாச்சார நடவடிக்கைகளையும் கிராம நிலையில் அபிவிருத்தி செய்ய சம்பந்தப்பட்ட அரசுத் துறைகளில் உள்ள நிபுணர்களின் அறிவுரைகளுடன் விளையாட்டு வளாகங்கள், நாடக சபாக்கள் போன்ற அமைப்புகளை நிறுவலாம்.

### மாவட்ட ஊராட்சிகள்

1) இயல் இசை நாடக மன்றங்கள், ஓவிய பள்ளிகள், கலைக்குழுக்கள் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு ஆணைக்குழு ஆகியவற்றின் உதவியுடன் மாவட்டங்களில் ஓவியம், இசை மற்றும் நாடகம் போன்ற போட்டிகள் நடத்துதல், விளையாட்டுகள், பயிற்சி முகாம்கள், கண்காட்சிகள், பந்தயங்கள், குழுப்போட்டி விளையாட்டுகள், உள்ளூர் திருவிழாக்கள் போன்ற நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யலாம்.

2) கலைஞர்கள், கைவினைஞர்கள், விளையாட்டு வீரர்கள் போன்றவர்களை சிறப்பித்து பரிசளிப்பதுடன், மாவட்ட அளவில் ஐந்தாண்டிற்கு ஒருமுறை மண்டல பண்பாட்டு மைய உதவி இயக்குநர்களின் உதவியுடன், மாவட்டத்திலுள்ள

## 28. DEVOLUTION OF POWERS

அனைத்து புராதன கலைகள் சார்ந்த சிறந்த கலைஞர்களின் முழு விவரங்களையும் தயாரித்து ஒரு பண்முக பட்டியலாக பராமரிக்கலாம்.

3) ஊரகப் பகுதிகளில் விளையாட்டுகளில் தரத்தை மேம்படுத்தும்பொருட்டு தேவையான அடிப்படை ஆதார வசதிகளை ஏற்படுத்தி தரலாம்.

4) தற்போது நலிந்த நிலையில் வாழும் சிறந்த கலைஞர்கள், அரசின் நிதியுதவியை பெறுவதற்கு அரசுக்குப் பரிந்துரை செய்யலாம்.

5) புதிய கலைப் பள்ளிகள் மற்றும் சிறந்த கலைஞர்களுக்கு ஊக்கமளித்து மேற்படி கலைகள் வளர தேவையான நடவடிக்கை எடுக்கலாம்.

6) தடகளப் போட்டிகள் மற்றும் பிரபலமான விளையாட்டுப்போட்டிகளை ஊக்கப்படுத்தும் வகையில் சிறப்பு பயிற்சிகள் நடத்துதல் மற்றும் விளையாட்டு வீரர்களுக்கு பரிசுகள் வழங்குதல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.

2. ஊராட்சி அமைப்புகள் பண்பாடு தொடர்பான கீழ்க்கண்ட நிறுவனங்களில் கீழ்க்கண்ட அலுவலர்களுடன் இணைத்து ஆய்வு மேற்கொள்ளலாம்.

| **நிறுவனம்** | **அலுவலர்** |
|---|---|
| 1. ஜவகர் சிறுவர் மன்றம் | மண்டல பண்பாட்டு மைய உதவி இயக்குநர் |
| 2. மாவட்ட கலைக்கூடங்கள் மன்றங்கள் | மண்டல பண்பாட்டு மைய உதவி இயக்குநர் |
| 3. மாவட்ட இசைப் பள்ளிகள் | மண்டல பண்பாட்டு மைய உதவி இயக்குநர் |

(ஆளுநரின் ஆணைப்படி)

**நா. ஆதிமூலம்**
அரசு செயலாளர்